# விருந்தினர் கவனத்திற்கு

- தனி நபர், துறைகளின் கோரிக்கையின் அடிப்படையில் மக்கள் தொடர்பு அலுவலரால் மட்டுமே அறைகள் ஒதுக்கப்படும். எனவே, **பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள விருந்தினர் அறை முன் பதிவு படிவத்தைப் பூர்த்தி செய்து நேரடியாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ (e-mail)** முன்கூட்டியே அனுப்ப வேண்டும்.
- **அறை முன்பதிவு படிவம் இல்லாமல் வாட்ஸப் (Whatsapp)/ குறுஞ்செய்தி (SMS), மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி அழைப்பு போன்றவற்றின் மூலம் வரும் கோரிக்கைகள் அறை ஒதுக்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**
- அறை முன்பதிவு விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் தவறாமல் பூர்த்தி செய்யவும்
- விருந்தினர் வருகைப் பதிவேட்டில் பெயர், அலைபேசி எண், எந்த துறைக்கு என்ன நோக்த்திற்காக வந்துள்ளீர்கள் போன்ற அனைத்து விபரங்களையும் தவறாமல் எழுத வேண்டும்.
- விருந்தினர் வருகைப் பதிவேட்டில் விபரங்களை பதிவு செய்த பின்னர்தான் அறை சாவி கொடுக்கப்படும். விருந்தினர் வருகைக்கு முன்பு அறை சாவி கொடுக்கப்படாது.
- விடுதியின் அனைத்து அறைகளும் இரண்டு படுக்கை கொண்ட அறைகள். எனவே தனிநபர் இரண்டு படுக்கைக்கான கட்டணம் செலுத்தி ஒருவர் தங்க அனுமதி இல்லை.
- பல்கலைக்கழக அலுவல்கள் நிமித்தமாக வரும் தனியார் நிறுவன பணியாளர்கள், அவர்கள் வருகை தரும் துறை தலைவர்களிடமிருந்து விண்ணப்பப் படிவத்தில் ஒப்பம் பெற்று மக்கள் தொடர்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
- விருந்தினர் தங்கும் அறைகளில் சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகள் தெரிய வந்தால் அவ்வறைகளில் சோதனை செய்ய நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.
- சுகாதாரப் பணிகளுக்காகவும், தரையைத் துடைக்கவும் பணியாளர்கள் வரும்போது அவர்களுக்கு ஒத்துழைக்கவும். தாங்கள் அறையில் இல்லாதபோது அப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனில் வரவேற்பறையில் அறையின் சாவியை கொடுத்துவிட்டு செல்லலாம்.

- குப்பைகள், தண்ணீர் பாட்டில்கள் போன்றவற்றை குப்பை கூடையில் கொட்ட வேண்டும். ஜன்னலின் வெளியே போடக் கூடாது.
- **அறையைவிட்டு செல்லும்போது தண்ணீர் குழாய்களும், மின் இணைப்புகளும் முறையாக நிறுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யவும்.**
- அறையின் சாவியைத் தொலைத்துவிட்டால் ரூ.400/- அபராதத்தொகையாக வசூலிக்கப்படும்.
- **விடுதியில் புகைபிடிப்பது, மது அருந்துவது கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறுவோர் விடுதியை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.**
- விருந்தினர்கள் தங்கள் பொருட்களை தங்கள் பொறுப்பில் வைத்துக் கொள்ளவேண்டும் - தொலைந்தால் நிர்வாகம் பொறுப்பேற்காது.
- தாங்கள் தங்கும் அறையின் வாடகை தொகைக்கான இரசீதை பெற்றுச் செல்லவும்

## முக்கியக் குறிப்பு

**விருந்தினர்கள் விடுதியிலிருந்து புறப்பட்டுச் செல்கையில், பணம் செலுத்தி அறை சாவியை ஒப்படைத்த பின்னர் தவறாமல், பதிவேட்டில் புறப்படும் நேரம் மற்றும் கையொப்பம் இடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கையொப்பம் இல்லாவிடின் பணம் செலுத்தியது உறுதி செய்யப்படவில்லை என்றே கருத்தில் கொள்ளப்படும்.**

**விருந்தினர்கள் பல்கலைக்கழக விடுதிக்குள் புகை பிடிப்பதையும், மது அருந்துவதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். மீறினால் வரும் காலங்களில் அவர்களுக்கு அறை ஒதுக்கப்படமாட்டாது.**

**பதிவாளர்**

**புகார்கள் ஏதும் இருப்பின் தொடர்பு கொள்ள**

முனைவர் ப. முரளி அர்த்தனாரி
மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - 9489056730 , 9443119053

முனைவர் சா. செந்தில்நாதன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - 98656 57100

திரு. வே. விவேகானந்தன், விருந்தினர் இல்ல மேலாளர், - 94862 14296
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.